1983 ஜனவரி 31]

திரு. த. மாரிமுத்து: அதிகமான அளவிற்கு பினாமி பெயரில் பொது மக்கள் பணத்தில் தவறு செய்திருக்கிறவர்களை. அப்படி தவறு செய்தவர்கள் யார் யார், எப்படியெல்லாம் தவறு செய்திருக்கிறார்கள் என்று இப்படி பொது மக்களின் பணத்தை கொள்ளையடித்தவர்கள் பற்றிய விவரங்களை தெளிவாக பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அதை பொது மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய அளவிற்குச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இப்படிப்பட்ட தவறுகள் செய்தவர்கள் யார் யார் என்பது அந்தந்தப் பகுதிகளின் பொது மக்களுக்கு ஏற்கனவே தெரியும் என்று நான் நம்புகிறேன். காரணம், வழக்குகள் தற்போது தொடரப்பட்டு நடந்து வருகின்றன.

நீதிமன்றங்களில் தீர்ப்பின் நகல்களைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம்.

*வினா எண். 68—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக நீதிமன்றங்களில் தீர்ப்பு நகல்களைப் பெறுவதில் அசாதாரண காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இக் குறையைப் போக்கி விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம். (ஆ) ஆம்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழக நீதிமன்றங்களில் தீர்ப்புகள் வழங்கப்பட்டு பல மாதங்களாகியும்கூட நகல்கள் பெற முடியாமல் வழக்குக்கு உரியவர்கள் சிரமப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அரசு அதைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாமதமாக எடுக்கயிருப்பதைத் தடுக்குமுகத்தான் ஜட்ஜ்மென்ட் காப்பீஸை பொறுத்தவரையில் துரிதமாக பொது மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தால்தான் வழக்குகள் அதிகக் காலம் தேங்கிக்கிடப்பதைத் தடுக்கமுடியும் என்ற நோக்கத்தோடு முதன்முறையாக ஜெராக்ஸ் காப்பீஸ் மெஷீன்ஸ்க்குக் கூட உத்தரவிட்டு அதை சென்னை உயர்நீதிமன்றம், மாவட்ட குற்றவியல் மன்றங்கள், மற்றும் தலைமை நீதி மன்றங்கள் ஆகியவற்றிற்கெல்லாம் நாம் தற்போது தந்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. விதி 135, 136-ன்படி தீர்ப்புகளின் நகல்கள் கட்டாயமாக கொடுத்தாக வேண்டும் என்ற அந்த விதியைக்கூட அரசு தற்போது தளர்த்த நடவடிக்கை எடுத்திருக்கிறது.

(முற்பகல் 9—30)

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, கட்டாயமாக தீர்ப்புகளின் நகல்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று விதியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அங்கேயிருக்கக்கூடிய அலுவலர்கள் பெரிய அளவிற்கு லஞ்சத்தை எதிர்பார்த்துக் கொண்டு, அந்த நகல்களைக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுத்துகிறார்கள். இது எல்லா கோர்ட்டுகளிலும் நடைபெறுகின்றது. ஆகவே, இதைக் குறித்து கறாராக ஒரு உத்தரவு போட்டு, இந்த லஞ்சத்தை ஓரளவிற்கேனும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றங்களிலே லஞ்சம் என்ற நிலை துரதிருஷ்டமான ஒன்றுதான். ஆனால், விதி எங்கெங்கே கடுமையாக இருக்கிறதோ, அங்கெல்லாம் இந்தக் குறைபாடுகள் நிகழ்வது நடைமுறையில் இருந்துவருகின்ற ஒன்று என்றாலும், இத்தகைய தவறுகளைக் குறைப்பதற்கு, கண்டிப்பாக இந்த விதியைத் தளர்த்தி விட்டால் பொதுமக்களுக்கு இன்னல் இராது என்று கருதி, இந்த விதியைத் தளர்த்துவதற்கு தற்போது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது நீதிமன்றங்களில் வழங்கப்படுகின்ற தீர்ப்புகளின் நகல்களைப் பெறுவதற்கு எளிதாக்குகின்ற வகையில், 'சீராக்ஸ்' மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீதிமன்றங்களில் தீர்ப்புகளை வாங்கி அப்பீல் அதாவது மேல் முறையீடு செய்வதற்கு 60 நாட்கள், 90 நாட்கள் என்றிருப்பதுபோல் தற்போது 'சீராக்ஸ்' மெஷின்கள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருப்பதால், தீர்ப்புகளின் நகல்களை குறிப்பிட்ட 15 தினங்களுக்குள் அல்லது 30 தினங்களுக்குள் கொடுத்தாக வேண்டுமென்ற ஒரு விதியை திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 36 இடங்களில் இந்த 'சீராக்ஸ்' மெஷின்களை வழங்கியிருக்கிறோம். வழங்கப்பட்ட இந்த இடங்களுக்கு 15 நாட்கள்கூட தேவையில்லை, 2. 3 நாட்களில் அந்த ஜட்ஜ்மென்ட் காப்பிகள் கிடைத்து விடுகின்றன. ஆனால், இன்னும் வழங்கப்பட வேண்டிய பல இடங்கள் இருக்கின்றன.

1983 ஜனவரி 31]

அதற்கு நிதி தட்டுப்பாடு தடையாக இருக்கின்றது. அடுத்த ஆண்டு நாம் இதுகுறித்து நடவடிக்கை எடுத்த பிறகு, அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஒரு விதியைக் கொண்டு வருவதற்கு அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'சீராக்ஸ்' மிஷின்கள் மூலம் காப்பி வழங்கப் படும் நடைமுறை உயர்நீதி மன்றத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருக் கிறதா? அச்சுக் காப்பி வழங்கப்படாததால் அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி சமீபத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்து, ஒரு குறிப்பிட்ட மருந்தை வாங்கக்கூடாது என்று தீர்ப்பளித்தும் கூட, அதன் நகல்கள் உடனடியாக கிடைக்காத காரணத்தினால், அதிகமான அளவில் அது வாங்கப்பட்டு, அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அச்சுக் காப்பி வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால், 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்குவது உயர்நீதி மன்றத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், அப்படி வழங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜட்ஜ்மெண்ட் காப்பிகள் பெறுவதில் அரசுக்கு அவ்வப்போது இழப்பு ஏற்படுவது உண்மைதான். இந்தக் குறைபாடுகள் உயர்நீதி மன்றத்திலே இருப்பதும் உண்மை தான், எனவேதான், அதைப் போக்குவதற்கு உயர்நீதி மன்றத் திலே அண்மையில் 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்கப்பட்டிருக் கின்றன.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நீதி மன்றங்களிலே நகல்களைப் பெறு வதற்கு 'சீராக்ஸ்' மெஷின்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஏற்கனவே இந்தப் பணி யினைச் செய்துவந்த பணியாளர்களுக்கு இதனால் வேலை இழப்பு ஏற்படுமா? அப்படியென்றால், அவர்கள் பணியினை இழக்காமல் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் நலனைக் கருதி சில முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போது, இது போன்ற பிரச்னைகள் வருகின்றது. ஆனாலும், இந்தப் பணி யாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படாத அளவிற்கு, அவர்களுக்கு மாற்று வேலை தர அரசு நடவடிக்கை எடுக்கும்.